| MCOP. No.1054/2016 | Name: – கண்ணன் | P W 1 | Date: 26.09.2024. |
|---|---|---|---|

<u>குறுக்கு விசாரணை :– ( 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

எனது சொந்த ஊர் பூவாலூர். அந்த பூவாலூர் கிராமம் திருச்சி சென்னை ரோட்டில் கிழக்கு புறமாக அமைந்துள்ளது என்றால் சரி. பிச்சாண்டவர் கோவிலும் திருச்சி சென்னை ரோட்டில் கிழக்குபுறமாக அமைந்துள்ளது என்றால் சரி. நான் நின்று கொண்டிருந்த நெல்லை ஸ்வீட் கடை திருச்சி சென்னை ரோட்டின் மேற்கு புறமாக உள்ளது என்றால் சரி. நான் திருச்சி சென்னை ரோட்டில் உள்ள பிச்சாண்டவர் கோவிலிலிருந்து பூவாலூர் செல்வதற்கு கிழக்கு புறமாக செல்லலாம் என்றால் சரியல்ல. ரோடு மாறிதான் வரவேண்டும். நான் என் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்திலும் வீட்டிற்கு இனிப்பு பலகாரங்கள் வாங்க வேண்டும் என்ற எண்ணத்திலும் அவசர அவசரமாக ரோட்டை குறுக்கே கடந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கார் வருவதை கவனிக்காமல் ரோட்டை குறுக்கே கடந்ததாகவும் கார்காரர் பிரேக் போட்டதாலும் பின்னால் வந்த லாரி கார் மீது மோதி விட்டதாகவும் என்று சொன்னால் சரியல்ல. நான் கொத்தனார் வேலை செய்து வந்தேன். விபத்திற்கு பிறகு வேலை செய்யவில்லை. நான் இப்பொழுதும் ஆட்களை வைத்துக் கொண்டு மேஸ்திரியாக இருந்து வேலை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மாதம் ரூ.20,000/– சம்பாதிப்பதாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணம் அடைந்து விட்டது என்றால் சரியல்ல. ஊரிலிருந்து நீதிமன்றத்திற்கு பேருந்து மூலமாக வந்தேன். பேருந்து ஏறி வரும் அளவிற்கு உடல்நிலை சீராக உள்ளது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. அதனால்

மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :–இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**